

நீலகிரி மாவட்டம் கொணவக்கரை ஊராட்சிக்குட்பட்ட பஞ்சாயத்து அலுவலகத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாமில், அரசு தலைமைக் கொறடா கா.ராமசந்திரன் மற்றும் நீலகிரி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு ஆகியோர் பூர்த்தி செய்து பொதுமக்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்ப படிவங்களையும், நடைபெற்று வரும் மருத்துவ முகாம் மற்றும் பல்வேறு துறைகளின் சார்பாக அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தனர். உடன் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் விவேக், நகர தகவல்தொழில்நுட்ப அணி அமைப்பாளர் முத்துக்குமார், ஃபாருக் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் மாவட்ட பத்திரிகையாளர்கள் சங்கத்தின் மாவட்டத் தலைவராக ஜோ.வில்சன், செயலாளராக எஸ்.கே.செந்தில்முருகன், பொருளாளராக மு.செல்வராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். பெரம்பலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில், மேனாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி.,யைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அப்போது மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், சங்க ஆலோசகர் ரா.குருராஜன் மற்றும் பெரம்பலூர் மாவட்ட பத்திரிகையாளர்கள், சங்க உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.

### "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டம் –3 தவணைகளில் நடைபெற்ற

# 112 முகாம்களில் 1,48,290 பயனாளிகள் பயன்பெற்றனர்!

## மணலியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!



சென்னை, செப்.2-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டம் - இதுவரை 3 தவணைகளில், 112 முகாம்கள் நடைபெற்று, 1,48,290 பயனாளிகள் பங்கேற்று பயன்பெற்றுள்ளனர் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 30.08.2025 அன்று சென்னை மாநகராட்சி, மணலி மண்டலத்திற்குட்பட்ட எவர்வின் வித்யாஸ்ரம் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாமினை பார்வையிட்டு, மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவச் சான்றிதழை வழங்கினார்.

இந்நிகழ்விற்கு பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

**"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாம்!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை மயிலாப்பூர் சாந்தோம் செயன் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் என்கின்ற ஒரு மகத்தான திட்டத்தை 02.08.2025 அன்று தொடங்கிவைத்தார். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்கள் கடந்த 4.5 ஆண்டுகளாக மிக சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, நடப்போம் நலம் பெறுவோம், சிறுநீரகம் பாதுகாப்போம், மக்களை தேடி ஆய்வக திட்டம் தொழிலாளர்களை தேடி மருத்துவத் திட்டம், இப்படி ஏராளமான திட்டங்கள் இந்த துறையின் சார்பில் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாகவும் சிறப்பாகவும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் 2 கோடி பயனாளர்களை தாண்டி செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மேலும், ஐ.நா. மன்றம் கடந்த ஆண்டுக்கான (United Nation Interagency Task Force Award 2024) என்கின்ற ஒரு மகத்தான விருதை மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு தந்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெற்றுகொண்டுள்ள இன்னுயிர் காப்போம்நம்மை காக்கும் 48 என்ற மகத்தான திட்டம் இன்றைக்கு இந்திய அளவில் அந்த திட்டத்தை நடத்துவதற்கு ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை நம்மிடம் கேட்டறிந்து அதற்குரிய ஆவணங்களை பெற்று செயல்படுத்த தொடங்கியிருக்கிறார்கள். இப்படி பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவுக்கு மட்டும் அல்ல உலக அளவில் முன்மாதிரியாக மிக சிறப்பாக செய்து வருகிறார்கள்.

அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட திட்டம் தான் நலம் காக்கும் ஸ்டாலின் என்கின்ற மகத்தான திட்டம். இத்திட்டத்தை பொறுத்தவரை தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 388 வட்டாரங்களிலும் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மூன்று முகாம்கள் என்கின்ற வகையில் மொத்தம் 1164 முகாம்கள், 10 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநகராட்சிகளில் 20 முகாம்கள், 10 இலட்சத்திற்கும் குறைவாக மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் 57 முகாம்களும், பெருநகர சென்னை மாநகராட்சியை பொறுத்தவரை 15 மண்டலங்களுக்கு 15 முகாம்கள் என்கின்ற வகையிலும், 1256 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

அந்த வகையில் இதுவரை 3 வாரங்கள் இம்முகாம்கள் நடைப்பெற்று முடிந்தது. 4வது வாரமாக தமிழ்நாடு முழுவதும் இம்முகாம்கள் இன்று நடத்த தொடங்கியிருக்கிறோம். அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் இம்முகாம்கள் ஒவ்வொரு வாரமும் நடத்தப்படவுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட இந்த திட்டம் முதல் வாரத்தில் 38 முகாம்கள் நடத்தப்பட்டு 44,795 பயனாளிகள் பயன்பெற்றார்கள். 09.08.2025 அன்று 36 முகாம்கள் நடத்தப்பட்டு 48,418 பயனாளிகள் மருத்துவ பயன் பெற்றார்கள். கடந்த வாரம் 38 முகாம்கள் நடத்தப்பட்டு 55,077 பேர் பயன்பெற்றார்கள். ஆக கடந்த வாரம் வரை நடத்தப்பட்ட மொத்த முகாம்களின் எண்ணிக்கை 112, பயனாளிகளின் எண்ணிக்கை 1,48,290.

இந்த நிலையில் இன்றைக்கு 4வது வாரமாக தமிழ்நாடு முழுவதிலும் இந்த முகாம்கள் நடைபெறுகிறது. இம்முகாம்களின் சிறப்பம்சம் என்னவென்றால் பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவம், கண் மருத்துவம் காது மூக்கு தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மனநல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு மருத்துவம், கதிரியக்கவியல் மருத்துவம் மற்றும் பொது அறுவை சிகிச்சை மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை போன்ற 17 வகையான சிறப்பு மருத்துவ அமைப்புகள் இதில் பங்கேற்கின்றன.

இதில் இன்னும் கூடுதல் சிறப்பு மாற்று திறனாளிகளை பொறுத்தவரை இன்றைக்கு தமிழ்நாடு முழுவதிலும் இலட்சக்கணக்கானவர்கள் மாற்றுதிறனாளிகளுக்கான எவ்வளவு மாற்றுதிறன் சக்தி உள்ளது என்பது குறித்து அந்த ஆவணங்களை பெற்று அரசின் உதவி தொகையை பெற்று வருகின்றனர். இதில் நிறைய பேருக்கு சான்றிதழ்களை பெறுவதில் சிரமங்கள் உள்ளது. முதலில் வருவாய் துறையின் சான்றிதழ் பெறுவது, பிறகு மருத்துவர்களின் பரிசோதனையில் எவ்வளவு திறன் உள்ளது என்பதை ஆய்ந்தறிவது அதற்கு பின்னர் அவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இப்படி அவர்கள் பல இடங்களுக்கு அலைந்து தான் அந்த மாற்றுத்திறனாளிச் சான்றிதழ் பெற முடிகிறது.

இந்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒரு குடையின் கீழ் எல்லாமுமாய் என்கின்ற வகையில் மாற்று திறனாளர்களை ஒரே இடத்திற்கு வரவழைத்து அவர்களின் மாற்று திறன் சக்தியை பரிசோதித்து அவர்களுக்கு இங்கேயே சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகளின் நிர்வாகத்தின் சார்பாக 14க்கும் மேற்பட்டவர்களுக்கு அச்சான்றிதழ் இந்த முகாமில் வழங்கப்பட்டுள்ளது. இது மாற்றுத்திறனாளிகளுக்கு மிகப்பெரிய அளவில் மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்று. அவர்களது துயரைத் துடைக்கின்ற ஒரு அற்புதமான காரியம். அது மட்டுமல்லாது, காப்பீட்டுத் திட்டத்தில் ஏற்கனவே உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு தங்களுடைய அட்டைகள் செல்லுபடியானதா? அது இப்போதும் பயன்படுத்தலாமா? என்கின்ற சந்தேகங்கள் எல்லாம் இருக்கும். அவர்கள் எல்லாம் இந்த முகாமில் வந்து அதை சரிபார்த்துக் கொள்ளலாம். அதோடு மட்டுமல்லாது புதிய குடும்பங்கள் உருவாகிக்கொண்டே இருக்கிறது. திருமணமாகி இரண்டு, மூன்று பேர் இருக்கிற புதிய புதிய குடும்பங்கள் தொடர்ந்து தினந்தோறும் பல்லாயிரக்கணக்கில் உருவாகி வருகிறது. அவர்களுக்கு உடனடியாக குடும்பத்திற்கான காப்பீட்டுத் திட்ட அட்டைகள் பெறுவதில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மட்டும் தான் அந்த வசதி இருக்கிறது.

இந்த நிலையில்தான் இந்த அரசு பொருப்பேற்றதற்கு பிறகு பெருநகர சென்னை மாநகராட்சியை பொருத்தவரை நுங்கம்பாக்கம், சைதாப்பேட்டை ஆகிய இரண்டு இடங்களில் புதிதாக காப்பீட்டுத் திட்டத்தில் உறுப்பினர்களாக சேர்வதற்குரிய வசதிகள் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது என்றாலும், இதுபோன்ற முகாம்களின் வாயிலாக அந்தந்த மண்டலத்திலேயே காப்பீட்டுத் திட்டத்திற்கான புதிய அட்டைகளை பெறுவதற்கான நடைமுறைகள் எடுக்கப்பட்டு அதுவும் இந்த முகாம்களில் உடனடியாக வழங்கப்படுகிறது. இப்படி பல்வேறு சேவைகள் இந்த முகாம்களின் வாயிலாக தரப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த முகாம்களை பொறுத்தவரை இன்னுமொரு கூடுதல் சிறப்பு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் அவர்களும் இங்கே அழைத்துவரப்பட்டு, அவர்களுக்கான முழு உடல் பரிசோதனை செய்யப்பட்டு, தேவைக்குரிய சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்த முகாம்களை பொறுத்தவரை முழு உடல் பரிசோதனை என்கின்ற வகையில் ஒருவர் இந்த முகாமிற்கு காலையில் வந்து பரிசோதனை செய்ய தொடங்கினால் அவருக்கு ஒட்டுமொத்தமாக இரத்த மாதிரிகள் எடுத்து அவர்களுடைய நோய் பாதிப்புகள் முழுமையாக கண்டறியப்பட்டு அதற்கான எல்லா பதிசோதனைகளும் செய்யப்பட்டு மாலையில் அவர்களுக்குரிய அந்த ஆவணங்கள் அவர்களிடத்திலே ஒப்படைக்கப்படுகிறது.

எனவே பரிசோதனைகள், தீர்வு, தொடர் சிகிச்சைகளுக்காண வழிகாட்டுதல் என்கின்ற வகையில் இந்த முழு உடல் பரிசோதனை திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி இன்றைக்கு மிக சிறப்பான முறையில் மக்களிடத்தில் மிகுந்த ஆதரவை பெற்று வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நிலைக் குழுத்தலைவர் (பொது சுகாதாரம்) மரு.கோ.சாந்தகுமாரி, பெருநகர சென்னை மாநகராட்சியின் நகர நல அலுவலர் மரு.ஜெகதீசன், அலுவலர்கள் மற்றும் முன்னணியினர் பங்கேற்றனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைபடியும், கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி மண்டல அளவிலான கலந்துரையாடல் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் பேசினார். உடன் சட்டமன்ற பொறுப்பாளர் தேவகுமார், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் இசை, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பரிதா நவாப், பொதுக்குழு உறுப்பினர் சித்ரா சந்திரசேகர், கிருஷ்ணகிரி நகரக் கழகப் பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி, ஒன்றிய செயலாளர்கள் தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, சரவணன், பேரூர் கழக பொறுப்பாளர் சாஜித் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக முன்னாள் அவைத் தலைவர்

# சி.வி.எம்.அ.பொன்மொழி 8ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## க.சுந்தர் எம்.எல்.ஏ. – க.செல்வம் எம்.பி. – நினைவஞ்சலி செலுத்தினர்!

## சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. 3 இடங்களில் உணவு வழங்கினார்!

காஞ்சிபுரம், செப். 2 -

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் உற்ற நண்பரும், முன்னாள் அமைச்சர், செந்தமிழ்ச் செல்வர் சி.வி.எம். அண்ணாமலை அவர்களின் மகனும், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட முன்னாள் அவைத் தலைவரும், கழக மாணவர் அணிச் செயலாளர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசனின் தந்தையுமான நினைவில் வாழும் சி.வி.எம்.அ. பொன்மொழி அவர்களின், 8ம் ஆண்டு நினைவு நாளான நேற்று முன்தினம் காஞ்சிபுரத்தில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. நிர்வாகிகள், அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த சி.வி.எம்.அ.பொன்மொழி யின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி நினை வஞ்சலி செலுத்தினர்.

காஞ்சிபுரத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் இல்லத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த சி.வி.எம்.அ.பொன்மொழி அவர்களின் திருவுருவப் படத்திற்கு, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் மற்றும் கழக மாணவர் அணிச் செயலாளரும், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., மற்றும் கட்சி நிர்வாகிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்வில், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாநகராட்சி மேயர் மகாலட்சுமி, ஒன்றியச் செயலாளர்கள் பி.எம்.குமார், க. குமணன், பி.எம். பாபு, தலைமைக் கழக பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, பகுதிக் கழகச் செயலாளர்கள் கே. திலகர், எஸ்.சந்துரு, அ.தசரதன், சு.வெங்கடேசன், காஞ்சிபுரம் ஒன்றியக் குழுத் தலைவர் மலர்கொடி குமார், வாலாஜாபாத் ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.கே. தேவேந்திரன், வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ். ராமகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ.யுவராஜ், மாநகர கழக நிர்வாகிகள் கே.ஏ. செங்குட்டுவன், ஏ. எஸ். முத்துச்செல்வன், பி.நிர்மலா, மற்றும் சுகுமாரன், விஸ்வநாதன், சுரேஷ், பாலமுருகன், 1வது பகுதி கழக நிர்வாகிகள் ஜி. குமரேசன், பா. தனலட்சுமி, ஆர். வினோத்குமார், வி.பகவான், சிவக்குமார், எஸ். முகுந்தன், செந்தில், சத்யா, சாகுல்அமீது, முனைவர் க. செல்வம், வேல்முருகன், ஜெய்கணேஷ், சுரேஷ், முத்து பலராமன், கே. அஞ்சுகம், கே.பார்த்திபன், 2வது பகுதி கழக நிர்வாகி கள் எல்லப்பன், கோவிந்தராஜ், சிவா, மோகன், ஸ்ரீதர், நடேசன், வ. கமலக்கண்ணன், சரவணன், பிரசாந்த், ப. சுரேஷ், சுரேஷ், ஜி. குமரன், எஸ். சுகுமாரன், 3வது பகுதி கழக நிர்வாகிகள் ஆ. மோகனவேல், வ. மலர்மன்னன், ச. விமல்தாஸ், கே. ராதாகிருஷ்ணன், சி. தங்கபாண்டியன், எம்.எஸ்.பி. பாண்டியன், ஆ. இப்ராஹிம் ஷெரீப், என். சங்கர், சேகர், சந்திரசேகரன், பி.கே. பெருமாள், டி.ரவி, டி.ரவிசந்திரன், எஸ். ஸ்ரீபால், இ. கங்காதரன், எம். ரமேஷ், 4வது பகுதி கழக நிர்வாகிகள் க. வடமலை, அருணாச்சலம், எம்.எஸ்.பாலன், சி.சௌந்தர்ராஜன், எஸ். மோகன், சன். கனகசபை, எஸ். பழனிவேல், த. விஸ்வநாதன், ஜி.எம். பழனி, ஜெகதீசன், வே. வெங்கடேசன், ப. சந்திரசேகரன், டி. தயாளன், இ. முனுசாமி, என். கிருபானந்தம், ஜி. ஞானம்,

காஞ்சிபுரம் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் கே.பி. ராதாகிருஷ்ணன், எஸ். எஸ்.ஆர். சசிக்குமார், சி. ராதாகிருஷ்ணன், தி. ராம்பிரசாத், எஸ். தமிழ்செல்வன், பி.எம். நீலகண்டன், மகேந்திரன், நவீன், சம்பத், நிதிஷ், நிர்மல், மணி, பாலு, கே. ஜெகன்நாதன், வாலாஜாபாத் வடக்கு ஒன்றியம் வி. பழனி, வெங்கட்ராமன், கவிதா டில்லிபாபு, எம். திருஞானசம்பந்தம், கே.பார்த்திபன், அருள்முருகன், ஜெயபால், எஸ்.கே. சுரேஷ், ஆர்.கே. சசிக்குமார், மஞ்சுநாதன், பார்த்திபன், அஜித், பார்த்தசாரதி, ரமேஷ், ராஜா, உதயகுமார், வேழவேந்தன், புலமைபித்தன், ஞானபிரகாஷ், பாஸ்கர், ஐயப்பன், தயாளன், மூவேந்தன், ஜோதி, ஏழுமலை, சுரேஷ், நந்தகுமார், கமலக்கண்ணன், தியகராஜன், தேவன், ஜோதி, செல்வம், மாரிமுத்து, உமாபதி, சுப்பிரமணி, வழக்கறிஞர்கள் B. கார்த்திகேயன், எஸ். ரமேஷ்குமார், துரைமுருகன், செல்வம், அரவிந்தன், மகேந்திரன், பாஸ்கர், தலைமைக்கழக பேச்சாளர்கள் தக்கோல் தேவபாலன், விஷார் தமிழரசன், காஞ்சி தாவுத், சன். சங்கர், மீனாட்சி சுந்தரம், வி.சி.க. திருமாதசன், மாமன்ற உறுப்பினர் கௌதமி, காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி தொ.மு.ச. நிர்வாகிகள் இரா. தேவராசன், கே. செல்வம், சி.வி.எம்.அ. சேகரன் உள்ளிட்ட சி.வி.எம்.பி குடும்பத்தினர் என ஏராளமானோர் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி, அஞ்சலி செலுத்தினார்கள்.

நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவருக்கும் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினரின் ஏற்பாட்டில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. மேலும், பகல் 12.00 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை எதிரிலும், 12.30 மணியளவில் பூக்கடை சத்திரம் அருகிலும் ஏழை, எளியோருக்கு உணவு வழங்கப்பட்டது.

## தமிழக டி.ஜி.பி.யாக (பொறுப்பு) வெங்கட்ராமன் நியமனம்!



சென்னை, செப். 2-

தமிழக காவல் துறை படைத்தலைவர் மற்றும் சட்டம் ஒழுங்கு டி.ஜி.பி., யாக பணிபுரிந்து வரும் சங்கர் ஜிவால், நேற்று முன்தினம் (ஆக.31) ஓய்வு பெற்றார். இதையடுத்து தமிழக போலீசின் நிர்வாகப் பிரிவு டிஜிபி.,ஆக பதவி வகித்து வரும் வெங்கட்ராமனுக்கு கூடுதலாக டி.ஜி.பி. பதவி (பொறுப்பு) வழங்கி தமிழக அரசு அறிவித்துள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டாக்டர் பொ. பத்மநாபன்

### செப்டம்பர் 2 (1991)



திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

திருநெல்வேலி நகரச் செயலாளராக பத்து ஆண்டு காலமும் பின்னர், மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும், மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

1955 முதல் 1976 வரை நெல்லை நகர்மன்ற உறுப்பினர், 1971இல் நெல்லை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், நெல்லை நகர கூட்டுறவு வங்கித் தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1988ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் "அண்ணா விருது" பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**